**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.S.T.C.No. 33/2025**

**Deposition of Witness for Complainant PW1**

**திரு. மனோஜ் த/பெ. பெல்லிராஜ் வயது. 49 மேல்அனையட்டி**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**03.09.2025** **Witness Signature :**

**PW1 குறுக்கு விசாரணை 11.57 A.M**

1. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். கோத்தகிரி நகர மன்ற உறுப்பினராக இருந்து வருகிறேன். இவ்வழக்கை எதிரியிடம் பணம் வாங்க வேண்டி தாக்கல் செய்துள்ளேன். எதிரியை எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் எனது பெரியப்பா மகன் சந்திரன் என்பவர் அரசு போக்குவரத்து கழகத்தில் வேலை செய்து வருகிறார். எதிரியின் கணவர் அங்கு வேலை செய்து வருவதால் எதிரியை எனக்கு தெரியும். இந்நீதிமன்றத்தில் எதிரியின் கணவர் மீதும் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கிலும் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும் என்ன தேவைக்காக பணம் வாங்கினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அவசரமாக வேண்டும் என்று கேட்டதால் கொடுத்தேன். இவ்வழக்கின் எதிரி ஜவுளிகடையில் வேலை செய்து வருகிறார். அவருக்கு மாத சம்பளம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. இந்த காசோலையில் உள்ள தொகை 4,75,000 /– ம் ஆகும்.

2. மேற்படி தொகைக்கு வட்டிக்காக கொடுத்தேனா? என்றால் இல்லை. கடந்த 24.10.2024 ம் தேதியன்று என்னிடம் பணம் கேட்டார். நான் மறுநாள் 25.10.2024 ம் தேதியன்று பணம் கொடுத்தேன். முதல் நாளில் ஜான்ஸ்கொயரில் வைத்து என்னிடம் பணம் கேட்டார். மறுநாள் 25.10.2024 ம் தேதியன்று எதிரிக்கு பஸ்ஸ்டாண்ட் அருகில் வைத்து பணம் கொடுத்தேன். மேற்படி விவரம் அறிவிப்பிலும், வழக்கிலும், நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் மற்றும் அவர் கணவரின் வருமானத்தை தெரிந்து தான் எதிரிக்கு பணம் கொடுத்தேன்.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 03.09.2025**
**Judicial Magistrate,**
**Kotagiri.**